ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 7.7 – ஏழையர் ஆவி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.7 – ஏழையர் ஆவி

‡ ஏழையர் ஆவி உண்ணும் ⋆
இணைக் கூற்றம் கொலோ அறியேன் ⋆
ஆழியம் கண்ண பிரான் ⋆
திருக்கண்கள் கொலோ அறியேன் ⋆
சூழவும் தாமரை நாண்மலர் போல் ⋆
வந்து தோன்றும் கண்டீர் ⋆
தோழியர்காள் ! அன்னைமீர் ! ⋆
என் செய்கேன் துயர் ஆட்டியேனே ‖ **7.7.1** ‖

ஆட்டியும் தூற்றியும் நின்று ⋆
அன்னைமீர் என்னை நீர் நலிந்தென் ⋆
மாட்டுயர் கற்பகத்தின் ⋆
வல்லியோ கொழுந்தோ அறியேன் ⋆
ஈட்டிய வெண்ணெய் உண்டான் ⋆
திருமூக்கெனதாவி உள்ளே ⋆
மாட்டிய வல் விளக்கின் ⋆
சுடராய் நிற்கும் வாலியதே ‖ **7.7.2** ‖

வாலியதோர் கனி கொல் ⋆
வினையாட்டியேன் வல்வினை கொல் ⋆
கோலம் திரள் பவளக் ⋆
கொழும் துண்டம் கொலோ அறியேன் ⋆
நீல நெடு முகில் போல் ⋆

திருமேனி அம்மான் தொண்டைவாய் ⋆
ஏலும் திசையுள் எல்லாம் ⋆
வந்து தோன்றும் என் இன் உயிர்க்கே ‖ **7.7.3** ‖

இன் உயிர்க்கேழையர் மேல் ⋆
வளையும் இணை நீல விற்கொல் ⋆
மன்னிய சீர் மதனன் ⋆
கருப்புச் சிலை கொல் ⋆
மதனன் தன் உயிர்த் தாதை ⋆
கண்ண பெருமான் புருவம் அவையே ⋆
என் உயிர் மேலன ஆய் ⋆
அடுகின்றன என்று நின்றே ‖ **7.7.4** ‖

என்று நின்றே திகழும் ⋆
செய்ய ஈன் சுடர் வெண் மின்னுக்கொல் ⋆
அன்றி என் ஆவி அடும் ⋆
அணி முத்தம் கொலோ அறியேன் ⋆
குன்றம் எடுத்த பிரான் முறுவல் ⋆
எனதாவி அடும் ⋆
ஒன்றும் அறிகின்றிலேன் ⋆
அன்னைமீர் ! எனக்குய்விடமே ‖ **7.7.5** ‖

உய்விடம் ஏழையர்க்கும் ⋆
அசுரர்க்கும் அரக்கர்கட்கும் ⋆
எவ்விடம் என்றிலங்கி ⋆
மகரம் தழைக்கும் தளிர் கொல் ⋆
பை விடப் பாம்பணையான் ⋆
திருக் குண்டலக் காதுகளே ⋆

கைவிடல் ஒன்றும் இன்றி ⋆
அடுகின்றன காண்மின்களே ॥ **7.7.6** ॥

காண்மின்கள் அன்னையர்காள் ! ⋆
என்று காட்டும் வகை அறியேன் ⋆
நாள் மன்னு வெண் திங்கள் கொல் ! ⋆
நயந்தார்கட்கு நச்சிலை கொல் ⋆
சேண் மன்னு நால் தடம் தோள் ⋆
பெருமான் தன் திரு நுதலே ⋆
கோள் மன்னி ஆவி அடும் ⋆
கொடியேன் உயிர் கோள் இழைத்தே ॥ **7.7.7** ॥

கோள் இழைத் தாமரையும் ⋆
கொடியும் பவளமும் வில்லும் ⋆
கோள் இழைத் தண் முத்தமும் ⋆
தளிரும் குளிர் வான் பிறையும் ⋆
கோள் இழை ஆவுடைய ⋆
கொழும் சோதி வட்டம் கொல் ⋆
கண்ணன் கோள் இழை வாள் முகமாய்க் ⋆
கொடியேன் உயிர் கொள்கின்றதே ॥ **7.7.8** ॥

கொள்கின்ற கோள் இருளைச் ⋆
சுகிர்ந்திட்ட கொழும் சுருளின் ⋆
உள் கொண்ட நீல நன்னூல் தழை கொல் ⋆
அன்று மாயன் குழல் ⋆
விள்கின்ற பூந் தண் துழாய் ⋆
விரை நாற வந்தென் உயிரை ⋆

கள்கின்றவாறறியீர் ⋆
அன்னைமீர் ! கழறா நிற்றிரே ॥ **7.7.9** ॥

நிற்றி முற்றத்துள் என்று ⋆
நெரித்த கையர் ஆய் ⋆
என்னை நீர் சுற்றியும் சூழ்ந்தும் வைதிர் ⋆
சுடர்ச் சோதி மணி நிறமாய் ⋆
முற்ற இம்மூ உலகும் ⋆
விரிகின்ற சுடர் முடிக்கே ⋆
ஒற்றுமைக் கொண்டதுள்ளம் ⋆
அன்னைமீர் ! நசை என் நுங்கட்கே ॥ **7.7.10** ॥

‡ கட்கரிய பிரமன் சிவன் ⋆
இந்திரன் என்றிவர்க்கும் ⋆
கட்கரிய கண்ணனைக் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
உட்குடை ஆயிரத்துள் ⋆
இவையும் ஒரு பத்தும் வல்லார் ⋆
உட்குடை வானவரோடு ⋆
உடனாய் என்றும் மாயாரே ॥ **7.7.11** ॥

அடிவரவு — ஏழையர் ஆட்டியும் வாலிய இன்னுயிர் என்று உய்விடம் காண்மின்கள் கோளிழை கொள்கின்ற நிற்றி கட்கரிய மாயா

ஏழையர் ஆவி முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்